பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 09 2023 **THURSDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு மகளிர் இடஒதுக்கீடு மசோதா முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளது என்று மத்திய அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

2. கனடாவுக்கான அனைத்து விசா சேவைகளையும் மத்திய அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

3. காவிரியில் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற மேலாண்மை ஆணையத்தின் உத்தரவில் தலையிட விரும்பவில்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

4. பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டுப்போட்டியின் ஆடவர் கால்பந்து ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை வென்றது.

----- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

<<<<<<<>>>>>>

மகளிர் இடஒதுக்கீடு மசோதா இன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீதான விவாதம் தற்போது நடைபெற்று வருகிறது.

மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் இதனை தாக்கல் செய்து பேசினார்.

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதற்கான முக்கிய நடவடிக்கையாக இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மசோதா மகளிர் மேம்பாட்டை உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.

மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

இந்த மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்று பேசிய பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, மகளிர் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக கூறினார்.

இந்த மசோதா ஒருமனதாக மாநிலங்களவையில் நிறைவேறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருப்பதாக திரு ஜெ பி நட்டா கூறினார்.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திருமதி ரஞ்ஜீத் ரஞ்சன் பேசுகையில், இந்த மசோதாவை தங்கள் கட்சி முழுமையாக ஆதரிப்பதாக கூறினார்.

காலதாமதமாக இந்த மசோதா ஏன் தாக்கல் செய்யப்படுகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த மசோதா மீதான விவாதத்தில் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையே, வரலாற்று சிறப்புமிக்க நடவடிக்கையாக, மாநிலங்களவையின் மாற்றுத்தலைவர்களுக்கான குழுவில் முழுமையாக பெண்கள் மட்டுமே நியமிக்கப்பட்டனர்.

13 பெண் உறுப்பினர்கள் இந்த குழுவில் நியமிக்கப்பட்டிருப்பதாக மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

இன்றைய நடவடிக்கைகளுக்கு மட்டும் இந்த குழு நியமிக்கப்படுவதாக அவர் கூறினார்.

மாநிலங்களவையை பெண்கள் வழிநடத்துவது மகளிர் வலிமையை உலகிற்கு உணர்த்தும் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

உறுப்பினர்களின் விவாதத்திற்கு பின்னர் மகளிர் இடஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்படும். மக்களவையில் நேற்று இந்த மசோதா நிறைவேறியது குறிப்பிடத்தக்கது.

<<<<<<<>>>>>>

சந்தியான்-3 வெற்றிபெற்றிருப்பது இந்தியாவின் மிகப்பெரிய சாதனை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று சந்திரயான்-3 திட்டத்தில் பங்காற்றிய விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் சாதனைகளை பாராட்டும் தீர்மானத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

வளர்ந்த நாடுகளே நிலவின் தென் துருவத்திற்கு விண்கலத்தை அனுப்பாத நிலையில், நாட்டின் மிகப்பெரும் சாதனையாக சந்திரயான்-3 வெற்றி அமைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின் வெற்றிக்காக பணியாற்றிய விஞ்ஞானிகள், குறிப்பாக பெண் விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு தமது பாராட்டுகளையும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துக்கொண்டார்.

தொடர்ந்து காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்களும் இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் நடைபெற்றுவரும் சுகாதார திருவிழாக்களில் மக்கள் அதிக அளவு பங்கேற்று வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை இந்த திருவிழாக்கள் நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

இதனையொட்டி, நடைபெறும் மருத்துவ முகாம்களில், உடல் உறுப்பு தானத்திற்கான உறுதியை வழங்குமாறும் அமைச்சர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

மின்னணு விசா உள்ளிட்ட கனடாவுக்கான விசா சேவைகளை இந்தியா தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு அரிந்தம் பக்ஷி இவ்வாறு தெரிவித்தார்.

கனடாவில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் துணைத்தூதரகங்களின் செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் சக்திகளுக்கு எதிராக அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுக்காததை கண்டித்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வன்முறையை தூண்டும் வகையில் கனடாவில் சில சக்திகள் செயல்படுவதாக அவர் கூறினார்.

கனடாவில் உள்ளவர்கள் மட்டுமல்லாது, பிற நாடுகளில் உள்ள கனடா நாட்டவர்களும், இந்திய விசாவுக்கு விண்ணப்பிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

என்றாலும், ஏற்கனவே விசா பெற்றிருப்போர் மற்றும் இதர ஆவணங்கள் வைத்திருப்பவர்கள் இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ளலாம் என்றும் திரு அரிந்தம் பக்ஷி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சுதந்திரப்போராட்ட வீரர்களின் உயிர் தியாகத்தை நினைவுகூரும் வகையில், நாடு முழுவதும் என் மண் - என் தேசம் இயக்கத்தில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகிறார்கள்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் இந்த இயக்கம் ஊராட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றதாக எமது செய்தியாளர் சுமன் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

காவிரியில் தமிழகத்திற்கு, கர்நாடகா 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவில் தலையிட விரும்பவில்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணை செய்த நீதிபதிகள் **B R Gavai,** பி எஸ் நரசிம்மா, பிரசாந்த் குமார் மிஸ்ரா ஆகியோரை கொண்ட அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்த பின்னரே காவிரி மேலாண்மை ஆணையமும், ஒழுங்காற்றுக்குழுவும் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டுள்ளதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>

என் மண் - என் தேசம் என்ற பிரச்சார இயக்கத்தின்கீழ் மும்பையில் பாரம்பரிய இசையுடன் மாணவர்கள் பங்கேற்ற அமிர்த கலச யாத்திரை இன்று நடைபெற்றது. **Bajani Mandal, Dhol Tasha** இசைக்கருவிகளுடன் கல்லூரி மாணவர்கள் மண் மற்றும் விதைகளை சேகரித்து யாத்திரையில் கலந்துகொண்டனர். மும்பை நகராட்சி நிர்வாகத்துடன் இணைந்து இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. **Panvel** என்ற இடத்தில் அமிர்த கலச யாத்திரை நாளை நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு ஜனவரி கடைசி வாரத்தில் பொதுத்தேர்தல் நடைபெறும் என அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் தொகுதி மறுவரையறை குறித்த முதலாவது பட்டியல் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அங்கு, திரு **Shabhaz Sharif** தலைமையிலான அரசு நாடாளுமன்றத்தை கலைத்து நடவடிக்கை எடுத்தது. தற்போது இடைக்கால அரசின் பிரதமராக திரு **Anwar Ul Haq** பதவி வகித்து வருகிறார்.

<<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் **Khandwa** மாவட்டத்தில் 108 அடி உயர ஆதிசங்கராச்சாரியார் சிலையை அம்மாநில முதலமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இன்று திறந்துவைத்தார்.

ஓம்காரேஸ்வரர் என்ற இடத்தில் உள்ள **Mandhata** மலையில் இந்த சிலை பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது மேலும், **Advaita Lok** அருங்காட்சியகத்திற்கும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் அடிக்கல் நாட்டினார்.

<<<<<<<>>>>>>

மகளிரை தலைமைப் பதவிக்குக் கொண்டுவருவதில் ஐ.நா. முன்மாதிரியாக திகழ வேண்டும் என்று பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா கூறியுள்ளார்.

நியூயார்க்கில் ஐ.நா. பொதுச்சபையின் ஆண்டு கூட்டத்தில் பேசிய அவர், பங்களிப்பு என்ற நிலையில் இருந்து, மகளிரை தலைமைப் பதவிக்கு உயர்த்துவதில் ஐ.நா. முன் உதாரணமாகத் திகழ வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஐ.நா. பொதுச்செயலாளர் பதவிக்கு இதுவரை பெண் ஒருவர் நியமிக்கப்படாதது வருந்தத்தக்கது என்றும் அந்தப் பதவிக்கு மகளிரை நியமிப்பதற்கான தருணம் விரைவில் ஏற்பட வேண்டும் என்றும் திருமதி ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப்போட்டியின் தொடக்க விழாவில் இந்தியாவின் சார்பில் ஹர்மன் பிரீத் சிங் மற்றும் **Lovlina Borgohain** தேசிய கொடியை ஏந்திச்செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் **Hangzhou** –ல் நாளை மறுநாள் இந்த தொடக்க விழா நடைபெறவுள்ளது.

மகளிர் கிரிக்கெட்டில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்தியா – மலேசியா இடையேயான காலிறுதி ஆட்டம் மழையினால் கைவிடப்பட்டதையடுத்து, இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியதாக அறிவிக்கப்பட்டது.

முன்னதாக, 15 ஓவராக குறைக்கப்பட்ட இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா, 2 விக்கெட் இழப்பிற்கு 173 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக **Shefali Verma** அதிரடியாக ஆடி 39 பந்துகளில் 67 ரன் குவித்தார்.

174 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்ய தொடங்கிய மலேசியா, விக்கெட் இழப்பின்றி, ஒரு ரன் எடுத்திருந்தபோது, மழையினால் ஆட்டம் கைவிடப்பட்டது.

தரவரிசைப்பட்டியலில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியது.

ஆடவர் கால்பந்து போட்டியில் இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

துடுப்பு படகு போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா, இறுதி சுற்றுக்கு முன்னேறியது.

---------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டி கொச்சியில் இன்று தொடங்குகிறது.

முதல் போட்டியில் கேரளா – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<<END>>>>>>